# உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்தல்

| வ. எண் | உவமை | உருவகம் |
|---|---|---|
| 1. | அமுதமொழி | மொழியமுது |
| 2. | தேன் தமிழ் | தமிழ்த்தேன் |
| 3. | மதிமுகம் | முகமதி |
| 4. | முத்துப்பல் | பல்முத்து |
| 5. | மலர் பாதம் | பாதமலர் |
| 6. | அமுதூற்று | ஊற்றமுது |
| 7. | கனி இதழ் | இதழ்கனி |
| 8. | வேல்விழி | விழிவேல் |
| 9. | பயிர் தமிழ் | தமிழ்ப்பயிர் |
| 10. | கார்குழல் | குழற்கார் |
| 11. | தாமரைமுகம் | முகத்தாமரை |
| 12. | மலை செல்வம் | செல்வமலை |
| 13. | தாமரைக்கண் | கண்தாமரை |
| 14. | கல்மனம் | மனக்கல் |
| 15. | கயல்விழி | விழிகயல் |
| 16. | பூவிரல் | விரல் பூ |
| 17. | மலரடி | அடிமலர் |
| 18. | விற்புருவம் | புருவவில் |
| 19. | மலர்க்கை | கைமலர் |
| 20. | தேன்மொழி | மொழித்தேன் |
| 21. | பொன்மலர் | மலர்ப்பொன் |
| 22. | கடல் நூல் | நூற்கடல் |
| 23. | வெள்ள இன்பம் | இன்பவெள்ளம் |
| 24. | பொன்னடி | அடிப்பொன் |
| 25. | கனிவாய் | வாய்க்கனி |
| 26. | குமுதவாய் | வாய்க்குமுதல் |
| 27. | குரங்கு மனம் | மனக்குரங்கு |
| 28. | பால் நிலவு | நிலவுப்பால் |

| வ. எண் | உருவகம் | உவமை |
|---|---|---|
| 1. | மொழியமுது | அமுதமொழி |
| 2. | பாதமலர் | மலர்பாதம் |
| 3. | உவகைத்தேன் | தேன் உவகை |
| 4. | செல்வமலை | மலைச்செல்வம் |
| 5. | கருணைக்கடல் | கடல் கருணை |
| 6. | தமிழன்னை | அன்னைத்தமிழ் |
| 7. | இடைத்துடி | துடியிடை |
| 8. | நீர்வேலி | வேலிநீர் |
| 9. | வாய்ப்பவளம் | பவளவாய் |
| 10. | தமிழ்த்தேன் | தேன்தமிழ் |
| 11. | நூற்கடல் | கடல் நூல் |
| 12. | திரைக்கை | கைத்திரை |
| 13. | உருவச்சிலை | சிலை உருவம் |
| 14. | தோள்மலை | மலை தோள் |
| 15. | தமிழ்த்தாய் | தாய்த்தமிழ் |
| 16. | கைகாந்தள் | காந்தள் கை |
| 17. | முகநிலா | நிலாமுகம் |
| 18. | முகமதி | மதிமுகம் |
| 19. | முகத்தாமரை | தாமரைமுகம் |

**உவமைத்தொடர்களைச் சொற்றொடரில் அமைக்க :**

| | |
|---|---|
| இலவு காத்த கிளி போல | இலவு காத்த கிளி போல தண்ணீருக்காக குடங்களுடன் மக்கள் காத்து நின்றனர் |
| காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல | தமிழர்கள் தாய்மொழியை மறந்து பிற மொழிகளை பேசுவதை கேட்கும் போது காதில் ஈயத்தை காட்சி ஊற்றியது போல இருக்கிறது |
| அடியற்ற மரம் போல | தந்தை இறந்த துயர செய்தியை கேட்டதும் மகன் அடியற்ற மரம் போல வீழ்ந்தான் |
| மடைதிறந்த வெள்ளம் போல | அறிஞர் அண்ணா அவர்கள் மடைதிறந்த வெள்ளம் போல பேசும் ஆற்றல் உடையவர் |
| கல்மேல் எழுத்துப் போல | ராஜராஜ சோழனின் வீர தீர செயல்கள் கல் மேல் எழுத்து போல மனதில் அழுத்தமாகப் பதிந்தது |
| அத்தி பூத்தாற் போல | நீண்ட நாட்களுக்குப் பின் தன் வீட்டிற்கு வருகை தந்த தோழியை கண்டு |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| | அத்திப்பூத்தார் போல வந்திருக்கிறார் என்றால் கயல்விழி. |
| மழை காணாப் பயிர் போல | மழை காணாப் பயிர் போல தலைவனை இழந்த மக்கள் வாடினர். |
| மலரும் மணமும் போல | மலரும் மணமும் போல கபிலரும் பாரியும் நட்புடன் இருந்தனர். |
| வேலியே பயிரை மேய்ந்தது போல | வேலியே பயிரை மேய்ந்தது போல அதிகாரியை கையூட்டு பெற்றார். |
| கீரியும் பாம்பும் போல. | கருத்து வேறுபாட்டினால் இளைஞர்கள் கீரியும் பாம்பும் போல அடித்துக் கொண்டனர் |
| உள்ளங்கை நெல்லிக் கனி போல | சிரியர் கற்பித்த பாடம் எங்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாக புரிந்தது. |
| சர்க்கரைப் பந்தலில் தேன் மழை பொழிந்தது போல | அறிஞர் அண்ணாவின் மேடைப்பேச்சு சர்க்கரை பந்தலில் தேன் மழை பொழிந்தது போல் இருக்கும். |
| பூவுடன் சேர்ந்த நாறும் மணப்பது போல் | பூவுடன் சேர்ந்த நாறும் மணப்பது போல் சான்றோருடன் சேர்ந்த நானும் புகழ் அடைந்தேன். |
| நகமும் சதையும் போல | மணமகனும் மணமகளும் நகமும் சதையும் போல பிரியாது இணைந்து வாழ வேண்டும் என வாழ்த்துவர். |
| இடியோசை கேட்ட நாகம் போல | இடியோசை கேட்டு நாகம் போல வகுப்பறைக்கு ஆசிரியர் வந்ததும் மாணவர்கள் அமைதியாகினர். |

| | |
|---|---|
| பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் | பழம் நழுவி பாலில் விழுந்தது போல செல்விக்கு அரசு வேலையுடன் உதவித்தொகையும் கிடைத்தது. |
| சேற்றில் முளைத்த செந்தாமரை போல் | படிப்பறிவில்லாத குடும்பத்தில் பிறந்தவன் மருத்துவராய் விளங்குவது சேற்றில் முளைத்த செந்தாமரை போல் இருந்தது. |
| விழலுக்கு இறைத்த நீர் போல | படிப்பில் கவனம் இல்லா மாணவர்களுக்கு கற்பிக்கும் பாடம் விழலுக்கு இறைத்த நீர் போல வீணாகும். |
| குரங்கு கைப்பட்ட பூமாலை போல் | அறிவில்லா அரசனிடம் அகப்பட்ட நாடு குரங்கு கைப்பட்ட பூ மாலை போல் சிதைவுறும். |
| பிஞ்சிலே பழுத்தது போல | பிஞ்சிலே பழுத்தது போல சில மாணவர்கள் இளம் வயதிலேயே அறிவைப் பெற்றிருப்பர். |
| காற்றும் ஈரமும் போல | ராமனும் சீதையும் காற்றும் ஈரமும் போல. |
| மழை கண்ட பயிர்போல | நீண்ட கால சிறைவாசத்திற்கு பின் விடுதலையான நெல்சன் மண்டேலாவை கண்டு தென்னாப்பிரிக்க மக்கள் மழை கண்ட பயிர் போல மகிழ்ந்து ஆடி பாடினர். |

www.tnpscgroup4.in


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in